ஆக்கம்: ஆசிரியர் R.யசந்தன்
கே/ உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. ‘ஒரு சிரட்டையில் நெருப்புத் தனலை நிறைத்துக் கொண்டு வெளியே வந்தா’ இங்கு சிரட்டை என்பதன் ஒத்தகருத்துச் சொல்.

   I. சட்டி II. சிரசு III. தவலை IV. கொட்டாங்கச்சி
2. ‘மஞ்சோனா மரத்தில் பக்குல் கத்தியது’ இங்கு பக்குல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. ஆந்தை II. பருந்து III. கழுகு IV. வௌவால்
3. ‘மூத்தம்மாவிற்கு அருகில் வெற்றிலை பெட்டி இருந்தது’ இங்கு வெற்றிலை என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. விம்மிதம் II. தாம்பூலம் III. வைபவம் IV. வைகல்
4. ‘மூத்தம்மாவிற்கு எனக்கு சோறு போட்டுத் தந்தா’ இங்கு சோறு என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. கஞ்சம் II. பருக்கை III. தாளம் IV. குயம்

5. ‘இனந்தெரியாத அச்சம் என்னை கவ்விக் கொண்டது’ இங்கு அச்சம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. சந்தேகம் II. துணிவு III. ஐயம் IV. பயம்
6. ‘ மிக அடர்த்தியாய் காற்றுக்கு.......’ இங்கு அடர்த்தி என்பதன் எதிர்கருத்துச் சொல்.
   I. பரவல் II. நெருக்கம் III. அரிது IV. எளிது

**விடை எழுதுக.**

1. “பெருஞ் சித்திரனாருக்கு தனது தலையை பரிசாக வழங்கிய குமணனும் கவச குண்டலங்களை வழங்கிய கன்னனும்.......”
   I. ‘குண்டலம்’ என்பதன் பொருள் யாது?
   II. கன்னனுடன் தொடர்புபடும் ‘இதிகாசம்’ எது?
2. “மனிதவர்க்கத்தின் தேம்பாவணியும் இலட்சியமே”
   I. தேம்பாவணி எச்சமய நூல்? அதனை எழுதியவர் யார்?
   II. இத்தொடர் மூலம் எதன் முக்கியத்துவம் விளக்கப்படுகின்றது?
3. “சந்திரமதியின் தியாக புத்தி தவ முனிவனின் மதியையும் வாயையும் அடைத்து விட்டது”
   I. சந்திரமதியுடன் தொடர்புடைய நூல் எது?
   II. ‘மதி’ என்பதன் பொருள் யாது?
   III. ‘தவமுனிவன்’ என்ற தொடர் மூலம் குறிக்கப்படுபவன் யாவன்?
4. “நரகம் புகினும் எள்ளேன் திருவருளாயிருக்கப் பெறினிரைவா”
   I. இங்கு யாரின் இலட்சியம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?
   II. ‘எள்ளேன்’ என்பதன் பொருள் யாது?
5. “நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று நீரினு மாரளவின்றே சாரற்”
   I. இங்கு யாரின் எவ் இலட்சியம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?
   II. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?